1983 பிப்ரவரி1]

டாக்டர் கே.கௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகளில் வேகக்கட்டுப்பாடு பொறுத்துவது அவசியம் இல்லை என்று உயர்நீதி மன்றத்தில் தடை இருக்கிறது என்பது எனக்கு ஞாபகம். லாரி ஓனர்ஸ் அசோஸியேஷன் உயர்நீதிமன்றத்திற்கு சென்று இந்த ஆணையை எங்கள் மேல் சுமத்தக்கூடாது என்று கூறி தடை வாங்கியிருக்கிறார்கள். இது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே அது தடை தான். முடிவு இல்லை. நீக்கிவிட்டதாக தகவல் வந்திருக்கிறது. அது சரிதானா என்பதை தெரிந்து சொல்கிறேன்.

கிராமபுறங்களுக்கு போக்குவரத்து வசதி செய்யும் திட்டம்

*வினா எண் 98 செல்வி ப. விசயலட்சுமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களுக்கு போக்குவரத்து வசதி செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை எவ்வளவு பேருந்துகள் விடப்பட்டுள்ளன?

(ஆ) இதனால் எவ்வளவு கிராமங்கள் பயனடைந்துள்ளன?

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: (அ) 2864 பேருந்துகள்

(ஆ) 4976 கிராமங்கள்

திரு ஏ.தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்யும் திட்டத்தின் கீழ் பேருந்து நிலையத்திலிருந்து 30 கிலோ மீட்டர் வரைதான் அங்கே டவுன் பஸ் விடமுடியும் என்று சொல்கிறார்கள் அப்படி பார்க்கிறபோது உள்பகுதியில் உள்ள கிராமங்கள் போக்குவரத்து வசதி இழந்துவிடுகிறது அதை மாற்றி உள் பகுதி கிராமங்களும் பயன் பெறும் வகையில் 30 கிலோ மீட்டர் என்பதை 35 கிலோ மீட்டர் என்று மாற்றி அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண் புமிகு திரு சு.முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 25 கிலோ மீட்டர் என்பதை 30 கிலோ மீட்டர் ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள் அதனால் 25லிருந்து 30 ஆக மாற்றினோம் இப்போது 30லிருந்து 35 ஆக மாற்ற வேண்டும் என்று கேட்கிறார்கள் இப்படியே போய்க்கொண்டிருந்தால் முடிவு இல்லாமல் போய்விடும் அதனால் 30 கிலோ மீட்டர் என்று முடிந்த முடிவாக எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு நி. அன்பழகன்: தலைவர் அவர்களே, பெரிய பேருந்துகளை கிராமப்பகுதிகளிலே விடுகிற போது லாபம் வருமா நட்டம் வருமா என்று கணக்குப் பார்த்து விடப்படுகிறது. ஆனால் பேருந்து வசதிகள் இல்லாத கிராமங்களிலே இழப்பை ஓரளவிற்குக் குறைக்கிற வகையில் மினி பஸ்களை விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: லாபம் இருக்கிறதா நட்டம் இருக்கிறதா என்று ஆராய்வது உண்மைதான். பேருந்துகள் இல்லாத கிராமங்களிலே இவைகளையெல்லாம் பார்க்காமல் விட்டுக் கொண்டு இருக்கிறோம். நட்டத்தைக் குறைக்கிற அளவுக்குத்தான் மினி பஸ்களை விட முடியும். அந்த ஏற்பாட்டைத்தான் அரசு செய்து கொண்டிருக்கிறது.

பாம்கோலா யூனிட்டிற்கான அரசு மானியம்

*வினா எண் 99—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாம்கோலா யூனிட்டிற்கு அரசு அளித்து வந்த மானிய தொகை நிறுத்தப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் என்றால் அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன்; (அ) மற்றும் (ஆ): தமிழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் 8 பாம்கோலா யூனிட்டுகளில் தர்மபுரி மாவட்டம் மத்தூரிலுள்ள பனைப் பொருள் திட்டத்தில் செயல்பட்டு வரும் ஒரு பாம்கோலா யூனிட்டிற்காக மட்டும் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் ரூ.1.34 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது. அதன் மானியம் யூனிட் ஆரம்பித்து ஓராண்டு செயல்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்டதாகும். அம்மானியம் அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு வழங்கப்படுவதில்லை. இம்மானியம் தவிர மற்ற பாம்கோலா யூனிட்டுகளுக்கு, மானியம் ஏதும் வழங்கப்படவில்லை. எனவே வழங்கி வந்த மானியத் தொகையை அரசு நிறுத்துவது பற்றி பிரச்சனை எழவில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே பாம்கோலா யூனிட்டுக்கு ஒரு ஆண்டுக்கு மானியம் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாக்கியுள்ள 7 யூனிட்டுகளுக்கும்—நாங்கள் நேரிலே போய் பார்த்தோம், நான் அதனால்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன்—ஒரு யூனிட்டுக்கு என்ன அடிப்படையிலே மானியம் கொடுக்கப்பட்டதோ அதைப் பரிசீலனை செய்து மற்ற 7 யூனிட்டுகளுக்கும் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?